பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

20 06 2024 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. மாற்றுத்திறனாளிகளின் நலனை உறுதி செய்யும் நாடே முன்னேற்றம் அடையும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. நாட்டில் கோதுமை கையிருப்பு போதுமான அளவு உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
3. பசுமை பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில், மரம் நடும் திட்டத்தை மத்திய அரசு முன்னெடுத்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.
4. நிதி தொடர்பான பாடப்பிரிவுகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.
5. உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

மாற்றுத்திறனாளிகளின் நலனை உறுதி செய்யும் நாடே முன்னேற்றம் அடையும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

ஒரு சமூகத்தில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களும் வளர்ச்சியடைய வேண்டும் என்பதையே நமது கலாச்சாரம் வலியுறுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

மாற்றுத்திறனாளிகளின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவரும் அக்கல்வி நிறுவனத்திற்கு திருமதி திரௌபதி முர்மு பாராட்டு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில், பட்ஜெட்டுக்கு முந்தைய மூன்றாவது ஆலோசனைக்கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

நாட்டில் கோதுமை கையிருப்பு போதுமான அளவு உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும், கோதுமை விலையை தொடர்ந்து கண்காணிக்கவும், அதன் விலை கட்டுக்குள் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உணவு மற்றும் பொது விநியோகத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை தொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்ற அமைச்சர்கள் நிலையிலான ஆய்வுக்கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாதம் 18-ஆம் தேதிவரை ரபி பருவத்திற்கான கோதுமை கொள்முதல், 266 லட்சம் மெட்ரிக் டன்னாக உள்ளது என்று மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

இந்தோனேஷிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு **Prabowo Subianto** –வுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்தார்.

இதுதொடர்பாக திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை இருவரும் பகிர்ந்துகொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>**

சுரங்க ஒதுக்கீடு பெற்றவர்கள் நிலக்கரி சுரங்கங்களை விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

புதுதில்லியில் மத்திய நிலக்கரி அமைச்சக அதிகாரிகள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

சுரங்க அனுமதி பெற்ற நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையிடமிருந்து சுரங்க செயல்பாட்டிற்கான அனுமதிகளை விரைந்து பெற வேண்டும் என்று தெரிவித்தார்.

நிலக்கரி பயன்பாட்டில் சுயசார்பை அடையும் வகையில், இறக்குமதியை குறைத்து நிலக்கரி உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு கிஷன் ரெட்டி அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

**<<<<<<>>>>>**

பசுமை பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில், மரம் நடும் திட்டத்தை மத்திய அரசு முன்னெடுத்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள அசோலா பதி சரணாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், இயற்கைக்கும், அறிவியல் முன்னேற்றத்திற்குமான சமநிலையை பேணுவது அவசியம் என்று கூறினார்.

மேலும், சுற்றுச்சூழலுக்கு இணக்கமான வாழ்க்கை முறையை மேற்கொள்வதே சிறந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கிளாஸ்கோ மாநாட்டில் வலியுறுத்தியதாக திரு பூபேந்தர் யாதவ் குறிப்பிட்டார்.

**<<<<<<>>>>>**

மகாராஷ்ட்ராவின் **Dahanu** அருகே **Vadhavan** துறைமுகத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம், மகாராஷ்ட்ரா கடல்சார் வாரியத்துடன் **Vadhavan** துறைமுக திட்ட நிறுவனம் இணைந்து இத்துறைமுகத்தை அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்கிறது.

இதுதொடர்பான, செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையத்தலைவர் திரு **Unmesh Sharad Wagh,** இத்துறைமுகமானது கடல்சார் போக்குவரத்தில் புதிய மாற்றங்களுக்கு வித்திடும் என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியை மேலும் ஒரு சதவீதம் உயர்த்தும் என்றும், இதனால், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாது என்றும் அவர் கூறினார்.

76 ஆயிரத்து 220 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் இத்திட்டத்தின் மூலம், பத்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுவார்கள் என்றும் திரு **Unmesh** தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

நிதி தொடர்பான பாடப்பிரிவுகளில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, பகுப்பாய்வு செய்வதன் மூலமாக நிதி அபாயங்களை துல்லியமாக அடையாளம் காண முடியும் என்று குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், கள்ளச்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 35-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பது தமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவித்தார்.

கடந்தாண்டு மரக்காணத்தில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழப்பு ஏற்பட்ட நிலையில், இதுபோன்ற உயிரிழப்புகளை தடுக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று திரு எல். முருகன் குற்றம் சாட்டினார்.

இச்சம்பவத்திற்கு, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு செல்வப்பெருந்தகை, தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் ஆகியோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, மாநில அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று கள்ளக்குறிச்சி சென்று உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாநில அரசு அறிவித்த பத்து லட்சம் ரூபாய் நிதியுதவியை வழங்கினார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்து திரு உதயநிதி ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கேரளாவில் இந்த வார இறுதியில் கனமழை முதல், அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வுமையம் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், 210 பேர் கொண்ட ஏழு தேசிய பேரிடர் மீட்புப்படை குழுக்கள், தமிழகத்தின் அரக்கோணத்திலிருந்து, அம்மாநிலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

கேரள அரசின் வேண்டுகோளுக்கு இணங்க, முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் இக்குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தேசிய பேரிடர் மீட்புப்படை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலின் ஜாமின் மனு மீதான உத்தரவை, தில்லி நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

நீதிபதி **Nyay Bindu** விடுமுறைக்கால அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது, மத்திய அமலாக்கத்துறையின் வாதங்களை கேட்டறிந்த பிறகு தீர்ப்பு ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளுத.

மேலும், இந்த வழக்கு விசாரணையில் காணொளி வாயிலாக திரு கெஜ்ரிவாலின் மனைவி பங்கேற்பதற்கான அனுமதியையும் ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>

சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே, உலகெங்கும் உள்ள பல நாடுகளில் யோகா தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

மாலத்தீவில், இன்று இந்திய தூதரகம் சார்பில் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

அதில் பங்கேற்ற மாலத்தீவுக்கான இந்திய தூதர் திரு **Munu Mahawar** அமைதியான வாழ்க்கை முறையை யோகா வழங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் வசிப்பவர்களும் யோகாவை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதாக யோகா பயிற்சியாளர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - பயிற்சியாளர் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

**Bridgetown**-ல் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

--------------

செக் சர்வதேச பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Pranav Soorma** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **Club Throw** பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------------

ஆசிய இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் உட்பட எட்டு பதக்கங்களை வென்றுள்ளது.

கஸகஸ்தானின் **Almati**-யில் நடைபெற்ற இப்போட்டியில், எட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Narayani Umesh Marathe** தங்கப்பதக்கத்தையும், நட்சத்திரா வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

12 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Pratitee Bordoloi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மற்றொரு பிரிவில் **Sarbartho Mani** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

10 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Aaradhya Das** வெண்கலப்பதக்கம் வென்றார்.

12 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Siddhanth Poonja** வெண்கலப்பதக்கம் வென்றார்.

16 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் வேலவா ராகவேசும், 18 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Harsh Suresh** –ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

<<<<<<END>>>>>